# சங்க இலக்கியத்தில் தமிழரின் வாழ்வியலறம்
# *LIVING PHILOSOPHY OF TAMILS IN SANGAM LITERATURE*

**சுகுமார். இரா**
உதவிப் பேராசிரியர், மொழிகள் துறை,
பெரியார் மணியம்மை அறிவியல்
மற்றும் தொழில் நுட்ப நிறுவனம்
*(நிகர் நிலைப் பல்கலைக் கழகம்),*
வல்லம், தஞ்சாவூர் - *613 403.*
மின்னஞ்சல்: ***sukumaranitha76@gmail.com***

**ஆய்வுச் சுருக்கம்**

பழமையும் பெருமையும் வாய்ந்த இலக்கியங்களுள் மிகவும் தொன்மைச் சிறப்பு வாய்ந்தவை சங்க இலக்கியம். சங்க காலத் தமிழரின் வாழ்க்கை அறத்தின் அடிப்படையில் அமைந்தது குறிப்பித்தக்கது. ஆகவே தான் சங்க இலக்கியமானது தமிழரின் வாழ்வியலறங்களை உலகிற்கு பறைசாற்றி நிற்கும் பெட்டமாக விளங்குகிறது. எனவே சங்க இலக்கியத்தில் தமிழரின் வாழ்வியலறம் குறித்து ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

**தமிழ், சங்க இலக்கியம், வாழ்வியல், அறம், வாழ்வியல் அறம்**

***Abstract***

***Among the literary works rich in antiquity and greatness, Sangam literature holds a significant place. It is noteworthy that the lifestyle of the Tamils during the Sangam era was based on ethics. Therefore, Sangam literature stands as a testament to the way of life of the Tamils, showcasing it to the world. Thus, the objective of this essay is to explore the way of life depicted in Sangam literature.***

***Keywords***

***Tamil, Sangha Literature, Life, Virtue, Life Virtue***

MAHIZH PATHIPAGAM

**அறப்பண்பு**

சங்க இலக்கியத்தில் பாடல்களுக்கு இடையே புலவர்கள் அறத்தை உணர்த்தியப் போக்கு காணப்படுகிறது.

> "**யாம் அம் இரப்பவை**
> **பொருளும் பொன்னும் போகமும் அல்ல: நின்பால்**
> **அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
> **உருளினர்க் கடம்பின் ஒலி தாராயோ**"[1]

என்ற பாடல் வரிகளில் கடுவன் இனவெயின்னார் செவ்வேளிடம் வேண்டுவதால் அக்கால தமிழ் மக்கள் அறப்பண்பு கொண்டு விளங்கினர் என்பதை அறியமுடிகிறது.

**காதற் பண்பு**

விளையாட்டுப் பருவத்தில் ஆயமகளிரொடு சென்று நெய்தலங்கானலின் வெண்மணிலில் புன்னைக் காய்களை அழுத்தியபழயாக விளையாடியபோது மறந்து விட்டுச்சென்ற புன்னை விதையொன்று முளைவிட்டு நிற்க, அதைத் தன் குழந்தை போல் கருதி, அன்றாடம் பாலையும் நெய்யையும் வார்த்து இனிமையோடு வளர்த்து வருகின்றாள் ஒரு பெண். செடியும் மரமாகின்றது. அப்பெண்ணிற்குத் திருமணமும் நடந்து பெண்ணொன்றும் பிறக்கிறது. அப்பெண்ணும் வளர்ந்து திருமணப்பருவத்தை அடைந்துஒரு காதலனையும் தனக்குரியவளாகப் பெறுகின்றாள்.

ஒருநாள் அக்காதலன் புன்னை மரத்தடியில் காதற் குறிப்புத் தோன்ற வந்து நிற்கின்றான். அப்புன்னை மரத்தின் எதிரே காதலனோடு நகைத்து விளையாடி மகிழ்ந்திருப்பதற்குப் பெரிதும் நாணி; தூர செல்கின்றாள். ஏனென்றால் அப்பெண்ணின் தாய் அவளிடம் இப்புன்னை உன்னைவிடச் சிறந்தது. அது உன் தமக்கை என்று அடிக்கடிச் சொல்லியிருக்கின்றாள். ஆகவே தமக்கை என்ற நினைவு வந்தவுடன் நாணுகிறாள். புன்னை மரத்தையும் தன் உடன்பிறப்பாகக் கருதியதால் அதன் எதிரி;ல் நின்று காதலனோடு பேசுவதற்கு நாணிய அப்பெண்ணின் காதற்பண்பு மிகவும் வியந்து போற்றுதலுக்குரியதாகும். இதனை,

> "**விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
> **மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**

**நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தன்று நுவ்வை ஆகுமென்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே**
**அம்ம நாணுதும் நும்மொடு நகையே**" [2]

என்ற பாடல் வரிகளால் உணரலாம்.

**இல்லறப் பண்பு**

கடிமணம் புரிந்து கொண்டு தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்துகின்றனர். தன் மகள் (தலைவி) இல்லறம் எவ்வாறு நடத்துகின்றாள் என்பதை அறிந்து கொள்வதற்காக செவிலியானவள் நேரில் வந்து பார்க்கின்றாள். அப்போது தலைவியோ தலைவனுக்காக சமையல் செய்து கொண்டிருந்தாள். கட்டித்தயிரைத் தன் காந்தள் விரல்களால் பிசைந்து, நெகிழ்ந்த சேலையினை அக்கையாலேயே பற்றிச் சரி செய்து கொண்டாள். கண்களில் குய்ப்புகைக் கொள்ளவும் தன் துன்பம் பாராமல் புளிக்குழம்பு வைத்தாள். தலைவி தன் கையால் சமைத்த உணவைத் தலைவன் சாப்பிடும் பொழுது இனிது எனப் பாராட்டிக் கூறி மகிழ்ந்து உண்டான். இதனைக் கண்ட தலைவியின் முகத்திலோ மகிழ்ச்சி பொங்கியது. இதனைக்,

"**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழா அது உடீஇ**
**தான் துழந்தட்ட தீம்புளிப்பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே**" [3]

என்ற பாடல் வரிகள் மூலம் தலைவியின் இல்லறப் பண்பினை உணரமுடிகின்றது. மேலும், ஓர் ஆடையைப் பகுத்து உடுத்தும் வறுமை நிலையிலும்; மனம் ஒன்றி வாழும் வாழ்க்கைச் சிறப்பினை

"**ஒன்றன்கூ றாடை யுடுப்பவரே யாயினும்**
**ஒற்றினார் வாழ்க்கையே வாழ்க்கை**" [4]

என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றது. மனம் ஒத்த அன்பே இல்லற வாழ்க்கையின் அடிப்படைப் பண்பாக விளங்குகிறது.

**மனையறம்**

அறிவாலும் ஆற்றலாலும் ஒழுக்கத்தாலும் நிரம்பிய ஆடவன் ஒருவன் தகுதி நிரம்பிய பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வதைப் பேறமாக கருதினர்.

"**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவ தெவன்**"[5]

எனத் திருவள்ளுவர் சிறப்பித்துக் கூறுவதிலிருந்து இவ்வுண்மை புலப்படும்.

மனையறம் புரிதலை மகளிரும் வினையறம் புரிதலை ஆடவரும் மேற்கொண்டதால் இல்லறம் சிறந்து விளங்கியது. இதனை

"**மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு**
**மருவின் இனியளவு முளவோ**"[6]

என்ற பாடல் வரிகளும்

"**மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்**
**முனைக்கு வரம் பாகிய வெண்வே னெடுந்தகை**"[7]

என்ற பாடல்களும் சிறப்பிக்கின்றது.

**குடும்பப் பண்பு**

பொருள் வயிற் பிரிந்து சென்ற தலைவனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள் தலைவி. அச்சமயம் தான் வளர்க்கும் பசுங்கிளியைத் தன் முன் கையில் அமரச் செய்து, வீட்டிலுள்ளவர்கள் அறியாத தனியிடத்தில் இருந்து பிரிந்து சென்ற தலைவர் இன்று வருவார் என்று கூறுமாறு அதற்குச் சொல் பயிற்றுகின்றாள். அதனைப் பயின்று அப்பசுங்கிளி 'அவர் இன்று வருவார்' என்று சொல்லும் போது தலைவி நாணுகின்றாள்.

குடும்பத்தினர் யாரும் தன் கவலையினை அறிந்து துன்புறுதல் வேண்டாம் என நினைத்துக் குடும்பப் பண்பினைக் காக்கக் கருதும் தலைவியின் மனநிலை இக்காட்சியின் வாயிலாக வெளிப்படுகின்றது. இதனை,

**" செந்தாரப்ப பைங்கிளி முன்கை ஏந்தி**
**இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென**
**இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென**
**மழலை இன்சொல் பயிற்றும்**
**நாணுடை அரிவை"**[8]

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

**விருந்தோம்பல் பண்பு**

இல்லற வாழ்வின் சிறப்புக்கும் உயர்வுக்கும் காரணமாய் அமைவது விருந்தோம்பற் பண்பாகும். அக்காலத்தில் மக்கள் மாலைப்பொழுதில் தங்கள் வீட்டுக் கதவை அடைக்கும் பொழுது விருந்து உண்போர் உள்ளனரோ என்று கூவியழைத்த பிறகே கதவை அடைக்கும் பண்பாடு காணப்பட்டது. இதனை,

**"நள்ளென் வந்த நார் இல் மாலைப்**
**பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ?"**[9]

என்ற பாடல் வரிகளால் உணரலாம்.

இல்லறத்தில் கணவன் மனைவி இருவரும் இணைந்து ஆற்ற வேண்டிய அறமாகக் கருதப்பட்டது விருந்தோம்பல். தம் உற்றார் உறவினர் மட்டுமல்லாமல் தம் இல்லம் நாடிவரும் பிறரையும் உண்டியாலும் உறையுளாலும் உபசரித்தல் அவர்களுடைய கடமையாக இருந்தது. விருந்தினர் உண்டு எஞ்சிய உணவைத் தலைவி இட தான் உண்ணுதலே தக்கது என்பதை தலைவன் கூற்று புலப்படுத்துகிறது. இதனை,

***" சாறு அயர்ந்தன்ன மிடா அச்செரன்றி***
***வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப***
***மலரத் திறந்த வாயில் பலர் உணப்***
***பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்***
***வசையில் வான் திணைப் புரையோர் கடும்பொடு***
***விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை***
***நின்னொடு உண்டலும் புரைவது"*** [10]

என்ற தலைவன் கூற்று வாயிலாக அறியமுடிகிறது.

கணவன் மனைவியரிடையே எழும் ஊடலைத் தீர்க்க வாயில்களாக விருந்தினர் அமைவர். விருந்தினர் வரின் இருவரும் ஊடலை மறந்து விருந்தினரைப் பேணும்; கடமையில் ஈடுபடுவர். தன் மனைவியின் ஊடலைத் தீர்;க்க யாரேனும் விருந்தினர் வரமாட்டார்களா என ஏங்கும் தலைவனின் நிலையை,

***"எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பாள் அன்று***
***சிறு முள் எயிறு தோன்ற***
***முறுவல் கொண்ட முகம் காண் கம்மே"*** [11]

என்று கூறுவதாக மொழிகின்றது.

***ஈகைப் பண்பு***

ஒருவரது துன்பத்திற்கு அவர் N;வண்டும் பொருளை எவ்விதப் பயனும் கருதாது. கொடுத்தலே ஈகை எனப்படும். இதனை

***"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்"*** [12]

என்ற பாடல் வரியால் தெளியலாம்.

***"செல்வத்துப் பயனே யீதல்***
***துய்ப்பே மெனினே தப்புந பலவே"*** [13]

என்ற வரிகள் ஈதலின் சிறப்பை உணர்த்துகின்றது.

***"ஈயென இரத்தல் இழிந்தென்று அதனெதிர்***
***ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று***
***கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்***
***கொளளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"[14]***

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் கொடுத்தலின் இயல்பையும் உயர்வையும் வலியுறுத்துகிறது. இல்லற இன்பத்தைவிட ஈதல் அறமே சிறந்ததாகக் கருதிய சங்கத் தமிழர் பொருளுக்;காக பிரிவதை நெறியாகவும் கடமையாகவும் கொண்டிருந்தனர். இதனை,

***"வண்டு படுபு இருளிய தாழ் இருங் கூந்தல்***
***சுரும்பு உணவிரிந்த பெருந்தண் கோதை***
***இவளினும் சிறந்தன்று, ஈதல் நமக்கு என"[15]***

என்ற பாடல் வரிகளால் உணரலாம்.

சங்க தமிழர் மறுமை பயன் நோக்காது பிறர் வறுமையைப் போக்குதலைக் கடமையாகக் கொண்டு ஈகையைச் செய்து வாழ்ந்தனர். பொருள் உடையவரின் கடமை பொருளிலார்க்குக் கொடுத்து உதவுதல் என்பது சான்றோரின் நெறியாகக் கருதப்பட்டது. அவ்வாறு வாழ்ந்த ஆய் அண்டிரனை புறநானூறு சிறப்பிக்கின்றது. இதனை

***"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்***
***அறவிலை வணிகன் ஆ அய் அலெ;லன்***
***பிறரும் சான்றோர் சென்ற நெறியென,***
***ஆங்குப் பட்டன்று அவன் கை வண்மையே"[16]***

என்ற பாடல் வரிகளால் உணர முடிகின்றது.

மேலும், பெயரும் புகழும் சேர்ப்பதற்காக ஈகையைச் செய்யாது ஈகையை ஈகையின் பொருட்டே செய்தனர். இதனை,

***"பெறுதற்கரிய வீறுசால் நன்கலம்***
***பிறிதொன்று இல்லை: காட்டு நாட்டோம் என,***
***மார்பிற் பூண்ட வயங்கு காழ் ஆரம்***

***மடைசெறி முன்கை கடகமொடு ஈர்த்தனன்: எந்நாடோ? என,***
***நாடும் சொல்லான்! யாரீரோ! எனப் பேரும் சொல்லான்***
***பிறர்பிறர் கூற வழிக் கேட்டிசினே:"***[17]

என்ற பாடல் வரிகள் நள்ளியின் ஈகைப் பண்பை போற்றுகின்றது.

**பகுத்துண்ணும் பண்பு**

அறங்களில் தலையாய அறம் பகுத்துண்டு வாழும் பண்பே ஆகும். இத்தகையப் பண்பை மேற்கொண்டு வாழ்ந்தவர்கள் சங்கத் தமிழர். தமக்கு கிடைத்த பொருள் அரிதாயினும் அவற்றை பிறருக்குக் கொடுத்து வாழ்வதையே சிறந்த வாழ்வாகக் கருதினர். இதனை,

***"நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து வறைநர்க்கு***
***பன் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்***
***கடும்பின் கடும்பசி தீர யாழநின்***
***நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்***
***இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது***
***வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்***
***எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே"***[18]

என்ற பாடல் வரிகளால் அறியலாம். வறுமையில் வாடிய புலவர்கள் வள்ளல்களிடம் பெற்ற பரிசிற் பொருளை,

***"பெற்றது மகிழ்ந்து கற்ற மருத்தி***
***ஓம்பாது உண்டு கூம்பாது வீசி"***[19]

என வாழும் இயல்புடையவர்கள் என்று அறிவிக்கின்றது. மேலும், பிறரோடு பகிர்ந்து உணடுட வாழ்வதற்கென்றே பலவற்றையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபடுதலே ஆண்மை எனக் கருதிச் சங்கத் தமிழர் வாழ்ந்தனர். இதனை,

***" பகுத்தூண் டொடுத்த வாண்மை"***[20]

என்று பதிற்றுப் பத்து மொழிகின்றது.

**மனித நேயப் பண்பு**

மனிதநேயம் என்பது பிற மனிதரிடத்து காட்டும் அன்புணர்வைக் குறிப்பாகும். சாதி, மதம், நாடு, மொழி பேதமின்றி ஒருவரின் மனம் நெகிழும்படி மற்றொருவர் மேல் வெளிப்படுத்தும் நட்பும் நேசமும் கலந்த உணர்வு மட்டுமல்லாமல் இரக்கத்தை; வெளிப்படுத்தும் செயல்பாடும் மனித நேயமாகக் கருதலாம்.

மன்னன் கிள்ளிவளவன் தனது பகைவனான மலையமானின் குழந்தைகளை யானைக் காலால் மிதித்துக் கொல்ல ஆணையிடுகிறான். ஆணையை நிறைவேற்றப் போகும் தருணத்தில் கோவூர் கிழார் என்னும் புலவர் இடையிட்டு, புறாவிற்காக உயிரைத் துறந்த மன்னது சிறப்பைக் கூறி, கொலையைத் தடுத்து நிறுத்துகின்றார். சாவை சந்திக்க வந்த குழந்தைகளை தம்முடைய சாதுரியத்தால் காத்து நின்ற புலவரின் அ:ருள் உள்ளமும் அதற்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும், அந்த முயற்சியால் கிடைத்த வெற்றி இவையனைத்தும் மனித நேயத்தின் பண்பாகும். இதனை

> “ **நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்**
> **இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை:**
> **இவரே, புலனுழுது உண்மார் புண்கள் அஞ்சித்**
> **தமது பகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்!**
> **களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த**
> **புன்றலைச் சிஅர் மன்று மருண்டு நோக்கி**
> **விதுந்திற் புன்கண் நோவுடையர்**
> **கெட்டனை யாயின், நீ வேட்டது செய்ம்மே**”[21]

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

பிசிராந்தையார் என்னும் புலவர் தனது வயது அதிகமாயினும் நரை தோன்றாமைக்குக் காரணம் என் மனைவி மாண்புமிக்கவள் மக்களும் அந்தன்மையரே, ஏவல் செய்யும் இளையோரும் நல்லவரே என் நட்டு வேந்தனும் அல்லவை செய்யாது அறம் காக்கும் செங்கோலன். என் நாட்டு சான்றோர்களும் நன்மை நிரம்பித் தீமை ஒழிந்து ஒழுக்கத்தில் நின்ற அடக்க மிக்க கொள்கையினர் எனப் போற்றுவதில் புலவர் எல்லோர் மாட்டும் கொண்ட மனித நேயம் புலப்படுகின்றது. இதனை,

**'யாண்டு பல ஆக நரைஇல ஆகுதல்**
**யாங்காகியர் என வினவுதிர் ஆயின்**
**மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்,**
**யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்**
**அல்லவை செய்யான் காக்கும்: அதன் தலை**
**ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோரர் பலர் யான் வாழும் ஊரே"[22]**

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**நன்றியறிதல் பண்பு**

ஒருவருக்கொருவர் உதவி செய்தலும் நன்றி மறவாதலும் அறப்பண்பாகும். பயன் கருதாமல் பிறருக்கு உதவுதல் சிறப்பு என்றும் தமக்கு உதவிய ஒருவருக்குக் கைம்மாறு செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அதைப் பெருமையாகக் கருதியவர்கள் நம் தமிழர்கள். இதனை,

**"முன்னொன்று தமக்காற்ற முயன்றவர் இறுதிக்கண்**
**பின்னொன்று பெயர்தாற்றும் பீடுடையாளர்"[23]**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றது.

**அடைக்கலம் தரும் பண்பு**

தன்னை அடைந்தாரைக் காத்தல் சிறந்த அறமாகப்; போற்றப்படுகிறது. தலைவனைக் காப்பாக அடைந்த தலைவியைப் பிரியாது வாழ்தல் வேண்டும் என்பதை

**"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை"[24]**

என்ற பாடல் வரி குறிப்பிடுகின்றது. பொருளீட்டி வாழ விரும்புவோர் தம்மை அடைக்கலம் புகுந்தாரைக் காக்க வேண்டும் என்பது அறநெறிகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இத்தகு நெறியைத் தலைவர் மறந்தாரோ என்று தலைவியிடம் தோழி அறம் உரைக்கிறாள். இதனை

**"இன்னா செய்து மினிது தலை யளிப்பினும்**
**நின்வரைப் பினளென் தோழி"[25]**

என்ற பாடல் வரிகளால் அறியமுடிகிறது.

**இரக்கப் பண்பு**

சங்க காலத் தமிழர்கள் இரக்கப் பண்பு கொண்டவர்களாக வாழ்ந்தனர். வள்ளல் பாரி இறந்தபோது அவனது மக்களைக் கபிலர் ஆதரித்ததை,

"………………………………..**தேருடன்**
**முல்லைக்கு ஈத்த செல்ல நல்லிசை**
**படுமணி யானைப் பறம்பின் கோமான்**
**நெடுமாப் பாரி மகளிர்: யானே**
**தந்தை தோழன்: இவர் என் மகளிர்**
**அந்தணன், புலவன் கொண்டு வந்தனனே**"[26]

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகின்றது.

மன்னர்கள் பகை நாட்டைமுற்றுகையிடும் போது, அந்நாட்டிலுள்ள ஆனினம், பார்ப்பன மக்கள், பெண்டிர், பிணி உடையவர், புதல்வரைப் பெறாதோர் முதலியோரைப் பாதுகாவலான இடத்திற்குச் செல்லுமாறு எச்சரிக்கை செய்யும் இரக்கவுணர்வு மிக்கவர்களாக விளங்கியதை,

"**ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணி**"[27]

என்ற பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றது.

**பசிபோக்கும் பண்பு**

மனித வாழ்வின் இயக்கமே உணவு தேடுதல் நோக்கத்திலேயே அமைகின்றது. பசியினால் உணவு தேடி அலைபவரின் பசியினைப் போக்கும் அதியமானின் பண்பினை புறநானூற்றுப் பாடலொன்று எடுத்தியம்புகின்றது. இதனை,

"**சிறியகட் பெறினே, எமக்கீயும் மன்னே!**
**பெரியகட் பெறினே,**

***யாம் பாடத் தான் மகிழ்ந்து உண்ணும்; மன்னே!***
***சிறுசோற்றானும் நுனிபல கலத்தன் மன்னே!***
***பெருஞ்சோற்றாலும் நனிபல கலத்தனன்; மன்னே!***
***என்பொடி தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே!"*** [28]

என்ற பாடல் வரிகளால் உணரலாம்.

**பிறருக்காக வாழும் பண்பு**

சங்கத் தமிழர் பிறருக்காக வாழும் பண்பினை உடையராக இருந்துள்ளனர். இந்திரர்க்குரிய அமுதம் கிடைப்பதாயினும் தமக்கு இனியது எனக்கருதி உண்ணமாட்டார்கள். தனக்கென வாழாமல் பிறருக்காக வாழுகின்றவர்களே உலகத்தில் பொருத்தமான தகுதியுடையவர்களே ஆவார். புகழ் என்றால் உயிரையும் பெறுவதாயினும் மேற்கொள்ளார். இவ்வாறு பிறருக்காக வாழும் உண்மையான இயல்புடையவர்களால் தான் உலகம் சிறப்புற்று வாழ்கிறது. இதனை,

***"உண்டால் அம்ம, இவ்வுலகம்: இந்திரர்***
***அமிழ்தம் இயைவதாயினும், இனிது எனத்***
***தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்***
***துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்***
***புகழ் எனின், உயிருங்கொள்ளலர்; அயர்விலர்;***
***அன்னமாட்சி அனையராகித்***
***தனக்கென முயலா நோன் தாள்***
***பிறர்க்கென முயலுநர் உண்மையனே"*** [29]

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

**பிறர் நலம் பேணும் பண்பு**

சங்க இலக்கியத் தோழி தலைவியைக் காணவரும் தலைவனிடத்தில் விரைவில் தலைவியைத் திருமணம் செய்து கொள் என்று கூறுவதுடன் தனக்கும் தலைவிக்கும் உள்ள உயரிய நட்பை

***"யாமே பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின்***
***இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே"*** [30]

என்ற கூறுவதன் வாயிலாகப் பிறர் வாழ்வு வீணாகக் கூடாது எனக் கருதும் தோழியின் உயரிய நட்பு மனிதப் பண்பின் வெளிப்பாடாக அமைகின்றது.

**பிறர் துயர் போக்கும் பண்பு**

சங்க காலத் தமிழர் இல்லறத்திலும் காதல் இன்பத்திலும்; பிறர் துயர் துடைத்தலையே மேன்மையாகக் கருதி வாழ்ந்தனர். இவ்விதமான மனிதப் பண்பு அக்காலத் தமிழரிடையே மிகுந்து காணப்பட்டன. இவற்றை,

> **"அறம் தலைப்பிரியாது ஒழுகலும், சிறந்த**
> **கேளிர் கேடுபல உளன்றலும், நாளும்**
> **வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்"**[31]

> **"செறுவோர் செம்மல் வாட்டலும், சேர்ந்தோர்க்கு**
> **உறுமிடத்து உவக்கும் உதவி ஆண்மையும்**
> **இல்லிருந்து அமைவோர்க்கு இல்"**[32]

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**நல்லதையே செய்யும் பண்பு**

சங்ககால மக்களிடத்து நல்லது செய்தல் வேண்டும் எனும் கருத்து வலியுறுத்தப்பட்டது. ஏனெனில் நன்மை, தீமை, நோய்தல், தனிதல் இவை பிறரால் வருவதில்லை. அவை நம்முடைய நல்வினை, தீவினைக்கு ஏற்ப அமைகிறது. எனவே, நல்லவையே செய்யவேண்டுமென வலியுறுத்தப்பட்டதை

> **"தீதும் நன்றும் பிறர்தர வாரர்**
> **நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**
> **சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்**
> **இனிது என மகிழ்ந்தன்றும் இலமே"**[33]

என்ற பாடலால் தெளியலாம்.

**நல்லுரை பகரும் பண்பு**

மக்களுக்கு மட்டுமின்றி ஆட்சி நடத்துகின்ற ஆட்சியாளர்களுக்கும் புலவர் ஒருவர் நல்லுரை பகர்வதைப் புறநானூற்றுப் பாடலொன்று குறிப்பிடுகின்றது. உலக உயிர்களைக் காப்பது சுரக்கின்ற நீரும், விளைகின்ற நெல்லும் மட்டும் அல்ல. பரந்த இவ்வுலகம் வேந்தனின் முறையான காவற்சிறப்பாலும் நிலை பெறுகின்றது. ஆகவே, ஆட்சி நடத்துகின்றவனே உண்மையான, உலக உயிர்களைக் காப்பன் ஆவான். அதற்கேற்ப உலக மக்களைப் பேணிகாப்பதையே கடமையாக மேற்கொண்டான்.

*“ **நெல்லும் உயிர் அன்றே: நீரும்; உயிர் அன்றே***
***மன்னர் உயிர்த்த மலர் தலை உலகம்**”[34]*

என்ற மோசிகீரனாரின் பாடல் மூலம் நல்லுரை பகர்வது அக்காலத்தில் மனிதப் பண்பாகக் கருத்தப்பட்டது.
நல்லோரின் நற்பண்பு

மனிதனின் பசிப்பிணியைப் போக்கி உணவு அருளும் நற்பண்பினை புறநானூறு

*“**நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்***
***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே***
***உண்டி முதற்றே உணவின் பிண்டம்***
***உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**”[35]*

என்ற புறநானூற்று பாடல் வரிகள் புலப்படுகின்றது.

*“**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்***
***அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்***
***எல்லோரும் உவப்பது அன்றியும்***
***நல்லாற்றுப் படூஉம் நெறியும் ஆர் அதுவே**”[36]*

என்ற வரிகள் நல்லாற்றுப் படுத்தும் நற்பண்பினையும் வெளிக்காட்டுகிறது.

**மக்கட்பேறு**

இல்லறம் என்பது அன்பும் அறனும் பூண்டு வாழ்வதாகும். அத்தகைய வாழ்வில் பெறும் பேறுகளுள் தலையாயது மக்கட் பேறு.

ஏனெனில் இல்லறம் மாட்சிமையடைய மக்கட் சிறப்பு அவசியமாகும். பரத்தையிற் பிரிந்து வந்த காலத்தில் தலைவன் புதல்வனைத் தழுவ, தலைவியும் ஊடல் தணிந்து தலைவனது புறத்தைத் தழுவினாள். இக்காட்சி இனிமைப் பண்புடையதாய்ப பார்போருக்குத் தோன்றுகிறது. இதனை,

***"கண்டிசின்; பான! பண்பு உடைத்து, அம்ம***
***மாலை விரிந்த பசு வெண் நிலவின்;***
***குறுங் காற் கட்டில் நறு பூஞ் சேக்கை***
***பள்ளி யானையின் உயிர்த்தனன் நசைஇ***
***புதல்வன் தழீ இயினன் விறலவன்***
***புதல்வன் தாய் அவன் புறம் கவை இயினளே"[37]***

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**அரசியற் பண்பு**

சங்க காலத் தமிழகத்தில் நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசர்களிடம் இருந்தது. ஏனெனில் சங்க கால மக்கள் நாட்டைப் பாதுகாக்கவும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஒரு வலிமை மிக்க தலைவன் அவர்களுக்கு வேண்டியதாயிற்று. ஆகவேதான் அவர்கள் அரசியல் என்ற ஓர்; அமைப்பை உருவாக்கி அதன் தலைவனாக அரசனை அமர்த்தினர். இவ்வாறு ஆட்சியில் அமர்த்திய அரசனின் கடமையினை மோசிகீரனார் பாடல் ஒன்று புலப்படுத்துகின்றது. இதனை,

***"நெல்லும் உயிர்அன்றே: நீரும் உயிர் அன்றே***
***மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்***
***அதனால் யான் உயிர் என்பது அறிகை***
***வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"[38]***

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

மேலும், அரசின் கொற்றம் அறநெறி முதற்றே. அதனால் கோல் கோடாது, குணங்கொல்லாது, ஆண்மையும் சாயலும், வண்மையும் உடையையாகி, இல்லோர் கையற வேண்டும் என்பதே அரசியல் பண்பாடு ஆகுமென மருதன் இளநாகனார் என்ற புலவர் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் குறிப்பிடுகின்றார். இதனை,

***"அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்***
***அதனால், நமரெனக் கோல் கோடாது"***
***பிறர் எனக் குணங்கொல்லாது***
***ஞாயிற்றன்ன வெந்திறல் ஆண்மையும்***
***திங்கள் அன்ன தண்பெருஞ்சாயலும்***
***வானத்து அன்ன வண்மையும் மூன்றும்***
***உடையை ஆகி இல்லோர் கையற"[39]***

என்ற பாடல் வரிகள் உறுதி செய்கின்றது.

**போர்ப் பண்பு**

சங்க இலக்கியங்களில் போர்கள் எல்லாம் அறத்தை வலியுறுத்துவன. மேலும் சங்கத் தமிழரிடையே போர் தவிர்க்க இயலாததாகவும், காலத்தின் கட்டாயத் தேவையானதாகவும் கருதப்பட்டது. போரானது என்றும் மாறாத உலகத்து இயற்கை. இதனை,

***"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்***
***புதுவது அன்று: இவ்வுலகத்து இயற்கை"[40]***

என்னும் புறநானூற்று வரிகள் எடுத்துரைக்கின்றது.

பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, அறத்தாறு நுவலும் பூட்கையும், யானை மேற் செல்லும் பெருமிதம் உடையவன் என்பதற்குப் போர்களின் உயர்ந்த பண்பை

***"ஆவு மானியற பார்ப்பன மாக்களும்***
***பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்***
***தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்***
***பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்***
***எம்மம்பு கடிவிடுதும்"[41]***

என்ற பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றது.

சங்க காலத்தில் தமிழகம் சேர, சோழ, பாண்டியர்கள் மற்றும் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அப்போது அவர்களுக்குள் போர்கள்

நிகழ்ந்ததை அறியமுடிகின்றது. அவ்வாறு போர் நிகழும்போது ஒத்த வலிமையுடையாரோடு போர் புரிதல், புறமுதுகிடுவாருடன் போர் செய்யாமை, பருவங்குறித்துப் போர் புரிதல், இரவில் போரிடாமை போன்ற போர் நெறிகள் தவறாது பின்பற்றப்பட்டன.

சான்றாக வெண்ணிப் போரில் மார்பிலே தைத்தவேல் புறத்தை ஊடுருவிச் சென்றது. அப்புண்ணை புறப்புண்ணாக கருதி நாணி உயிர் விட்டான் பெருஞ்சேரலாதன். இதனை,

> "**கலிகொள் யாணர் வெண்;pப் பறந்தலை**
> **மிகப் புகழ் உலகம் எய்திப்**
> **புறப்புண் நாணி, வடக்கிருந்தோனே**"[42]

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**முடிவுரை**

சங்க காலத் தமிழர் அறப்பண்பு கொண்டு வாழ்ந்தனர் என்பதையும் காதற்பண்பு, இல்லறப் பண்பு முதலானவற்றில் சிறந்து விளங்கியதையும் வாழ்வியலறமாக காணமுடிகிறது. மனையறமே பேரறமாகக் கருதப்பட்டதையும் மனையறத்தால் இல்லறம் சிறந்ததையும் அறியமுடிகிறது.

சங்க காலத் தமிழரிடையே காணப்படட குடும்பப் பண்பு, விருந்தோம்பல், ஈகை, பகுத்துண்ணும் பண்பு, நல்லதையே செய்யும் பண்பு, நல்லுரை பகருதல், நல்லோருக்கான நற்பண்பு,நன்றியறிதல் ஆகியவற்றைச் சங்க இலக்கியத்தின் வாழ்வியலறமாக அறியமுடிகிறது. மேலும் பசித்துயர் போக்கல், இரக்கவுணர்வு, பிறருக்காக வாழுதல், பிறர்துயர்போக்குதல், மக்கட்பேறு, அரசியற் பண்பு, போர்ப் பண்பு முதலானவற்றையும் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைந்திடக்கூடாது என்னும் நோக்கிலும் மனித நேயம் அமைந்து கிடப்பதையும் வாழ்வியலறமாக உணரமுடிகிறது. இங்ஙனமாக சங்க இலக்கியத்தில் தமிழரிடையே நிலவிய வாழ்வியலறங்கள் பெரிதும் போற்றப்பட்டிருக்கின்றன.

**அடிக்குறிப்புகள்**

1. பரிபாடல், பா..5;78-81
2. நற்றிணை, பா.172
3. குறுந்தொகை, பா.167
4. கலித்தொகை, பா.18;10-11
5. திருக்குறள்,46
6. குறுந்தொகை பா.322; 5-6
7. புறநானூறு,பா.314;1-2
8. அகநானூறு, பா.34:14-18
9. குறுந்தொகை, பா.118;2-4
10. குறிஞ்சிப்பாட்டு, பா.வரிகள்.201-207
11. நற்றிணை,பா.120;10-12
12. கலித்தொகை, பா.133:6
13. புறநானூறு, பா.189;7-8
14. மேலது,பா.204;1-4
15. அகநானூறு,பா.131;3-5
16. , பா.134;1-4
17. மேலது,பா.150:18-24
18. புறநானூறு,பா.163:1-7
19. மேலது,பா.47:4-6
20. பதிற்றுப்பத்து, பா.38:15
21. புறநானூறு,பா.46
22. புறநானூறு. பா. 191
23. ,பா.34:4-5;
24. மேலது,பா.133;7;
25. குறுந்தொகை,பா.397:6-7;
26. புறநானூறு,பா. 201;2-7
27. புறநானூறு பா.9;1-2
28. மேலது,பா.235;1-6
29. மேலது,பா.182
30. அகநானூறு,பா.12;4-5;
31. மேலது,பா.173;1-3-
32. மேலது,பா.231;1-3
33. புறநானூறு, பா.192;2-5
34. மேலது,பா.192;2-5
35. மேலது,பா.18;18-21
36. மேலது,பா.196;6-9
37. குறுந்தொகை,பா.359
38. புறநானூறு,பா.186
39. மேலது,பா. 55;12-18

MAHIZH PATHIPAGAM

40. மேலது,பா. 76:1-2
41. மேலது,பா. -9-
42. மேலது,பா. 66;6-8

MAHIZH PATHIPAGAM